சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 22.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-15 |
| சாட்சியின் பெயர் | : | ரவிச்சந்திரன் |
| தந்தை பெயர் | : | வீரப்பன் |
| கிராமம் | : | கண்கொடுத்தவணிதம் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. ஆர். வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7, 9, 10 எதிரகள் ஆஜர். 8 வது எதிரி வேறொரு வழக்கில் சிறையில் இருந்து வருகிறார். அவர் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக எனக்கு சொந்தமான ஹோண்டா வண்டியில் கண்கொடுத்தவணிதம் என்ற ஊரிலிருந்து கடைத்தெருவிற்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது இரவு 07.00 மணி இருக்கும். கண்கொடுத்தவணிதம் கடைத்தெருவில் வண்டியை போட்டிருந்தேன். சாமான்கள் வாங்கி கொண்டு வெளியில் வந்து பார்த்தப்போது வண்டி காணவில்லை. கொரடாச்சேரி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். போலீசார் இன்னும் எனது வாகனத்தை கண்டு பிடிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

கடந்த 14.11.2021ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு எனக்கு சொந்தமான TN 50 AD 8123 என்ற Honda Due என்ற இரு சக்கர வாகனத்தில் கண்கொடுத்தவணிதம் கடைத்தெருவிற்கு வந்து கொண்டிருக்கும்போது, எனது வாகனத்தை முந்திக்கொண்டு இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள், அவர்கள் வந்த வண்டியான Hero Honda Splendor Plus TN50 X 8499 என்ற இரு சக்கர வாகனத்தை போட்டு விட்டு எனது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, எனது வண்டியை பறித்துக்கொண்டு சென்று விட்டார்கள் என்று நான் புகார் கொடுத்தேன் என சொல்லிவிட்டு தற்போது எனது வண்டியை காணவில்லை என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.01.22 18:17:13 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.